1968 ஆகஸ்ட் 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இப்பொழுது லுங்கி வியாபாரம் நல்ல முறையில் இருக்கிறபடியாலும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைகொடுக்கப்படுவதாலும், லுங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு நெசவாளியின் மாத வருமானம் ரூ. 75 முதல் ரூ. 100 வரையிலுள்ளது. லுங்கி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்பைவிட இப்பொழுது அதிகமான அளவில் லாபம் கிடைத்துவருகிறது என்ற அடிப்படையின் பேரிலேயே இந்த நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்பது தெரியவருகிறது.

(3) இராதாபுரம் துணை வட்டத்தில் பருவ மழையின்மையும் பஞ்ச நிவாரண வேலைகளும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்தில் தொடர்ச்சியாக பருவமழை தவறியதால் கிணறுகளில் தண்ணீர் இன்றி வறட்சி ஏற்பட்டு வேளாண்மைப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் பஞ்ச நிவாரண வேலையை ஆரம்பிக்கவும், அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கடன் வசூல்களைத் தள்ளி வைக்கவும், நஞ்சைத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும் வேண்டியது பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பிசானப் பயிர்ப் பருவத்தின் போது வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் துணை வட்டத்திலும், பிற வட்டங்களிலும் பயிர்கள் பாதிக்கப்பட்டன. குறிப்பாக இராதாபுரம் துணை வட்டத்தில் மழை பெரிதும் தவறிவிட்டதால் அங்கே பெரும் பகுதிகளில் நஞ்செய் பயிர்களும் புஞ்செய் பயிர்களும் சாவியடைந்துவிட்டன. வருவாய்த் துறை வாரிய 13-ம் எண் நிலையாணையின் கீழ் நஞ்சை நிலங்களுக்கு நில வரித் தள்ளுபடி வழங்கப்பட்டது. மேலும், நஞ்செய் நிலங்கள் மீதான நடப்பு நிலவரி வசூலை 1378-ம் பசலிக்கு ஒத்திப் போடவும் அனுமதி வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் கடன் தவணைகளை மெதுவாக வசூல் செய்யும் கொள்கையைப் பின்பற்றுமாறும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கடந்த மார்ச் திங்களில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு தீர்மானம் கொண்டுவந்தபோது, ராதாபுரம் பகுதியில் நிலத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவும், பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ரூ. 5,30,000 அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். நாளது தேதி வரை அங்கு மழை பெய்யாத காரணத்தால் கூடுதலாகப் பஞ்ச நிலை ஏற்பட்டு இருப்பதால் பஞ்ச நிவாரண வேலையை உடனடியாக ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தற்போது நிலத் தீர்வை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பஞ்ச நிவாரண வேலைகள் எந்த அளவு செய்யப்பட்டு வருகின்றன, இன்னும் எந்த அளவு அனுமதிக்கலாம் என்பது மாவட்ட அதிகாரியின் விரிவான அறிக்கையின் பேரில்தான் மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியம் என்று கருதப்பட்டால் அரசாங்கம் யோசிக்கலாம்.

(4) திருச்சி மாவட்டத்தில் மர்மத் தீ விபத்துகளினால் ஏற்பட்ட சேதங்கள்.

திரு ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, கடந்த மூன்று வார காலமாக திருச்சி நகர்ப்புறங்களிலும், திருச்சி மாவட்டத்தில் கிராமப் பகுதிகளிலும் பரவலாக மர்மத் தீ விபத்து ஏற்பட்டு வீடுகளும் வைக்கோற்